**FLAT FOR RESALE**
**@WEST TAMBARAM**
Gated Community
2 BHK -948 Sqft
UDS -442 Sqft
2nd Floor, 11 YRS old, CCP Lift
Power Backup, CCTV,
Park, Security Guard
Rs 41L No Brokers
SARAVANA REALTY
9789052332 / 89395 70300



# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **TAMBARAM** Weekly News Paper www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:12 Issue -40 02 Feb 2025 - 08 Feb 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



**PLOT FOR SALE**
**@ HASTINAPURAM**
14 GROUNDS
- 2 km From Chrompet
- Fully Compounded Property
- Clear Title

93637 01080
97870 61547



**INDIVIDUAL FLOOR FLAT FOR SALE**
**@ CHITLAPAKKAM, BEHIND VIOLET SCHOOL**
Hand over March 2025



3 BHK Only
Each floor :1504 sqft
EACH FLOOR 1 UNIT
- Lift - CCTV - EACH 2 CCP
- Electrical Car Charge Point
- Solar for common Area

Site Address : Plot No.10 Murugesan st, Behind Violet School, Chitlapakkam, Chennai 64.
Invite Joint venture and individual House Construction
PRETHVIGA HOMES
Office Address : No.8, S1, Shawallace Colony, Chitlapakkam, Chennai - 600 064.
98410 43539 / 98419 91265



**WANTED OFFICE ASSISTANT FOR ADVOCATE'S HOME OFFICE**
In Rajakilpakkam- Near Camp Road (Selaiyur)
LL. B, MBA, BBA, B. com or any Graduation Computer Experienced Person with English Typing and Good Proficiency in English is needed. Candidate with schooling in English Medium preferred. Possession of Laptop and Two Wheeler will be added advantage. Salary: Negotiable
Ct: 9444072037 Advocate (Lt Col) AK Antony - Practicing at Madras High Court.



**PAAVAYEE BUILDERS**
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial




FLATS @ CHROMPET GANAPATHIPURAM
600 Mts From 200 Ft Radial Road
2 & 3 BHK
Area: 955 Sqft Onwards
No Water Logging
✓ Lift ✓ CCP ✓ CCTV ✓ Metro Water ✓ Video Door
Site Address : Selvaraj Street, Ganapathipuram, Chrompet, Chennai - 600 044.

PREMIUM FLATS FOR SALE @ HASTHINAPURAM
3 BHK
✓ Covered Car Parking
✓ Lift ✓ CCTV
& More Amenities
Site Address : Mc Nagar 1st Main Road, (Opp. to Sai Baba Temple), Hasthinapuram, Chitlapakkam, Chennai - 600 064.




Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223



Periyandavar Thunaai Muthumari Amman Thunaai
**PM CONSTRUCTION**
Email:Manimanikandanni50067@gmail.com
Construct Your dreamHome
FREE
- Architect Drawing
- Building Design
- Interior
- Vasthu
- False Celling
- CCTV Camera

PER SQ.FT 1949
One Year Free Maintenance



No.8,First Street,Ramani Nagar (Near) Krishna Nagar West Tambaram, Chennai - 600 063
No.4,Traffic Avenue Meenakshi Nagar, Pallikaranai, Chennai- 600 100
77083 89661 / 95855 58410



**FLATS FOR SALE**

@ CHROMEPET
Paul Victor Street, Near MIT Bridge 100 Mtrs From GST Road
Deluxe Flats
2 & 3 BHK - 954, 1023 & 1103 Sqft

@ PALLIKARANAI
LIC Nagar, (Nr. Velammal New Gen School)
2 BHK Deluxe Flats
GF - 893 Sqft & 2nd Floor - 1045 Sqft (With 300 Sqft Pvt Terrace) Just 3-in-one Complex

@ KUMBAKONAM
Solaiappan Street, 100 Mtrs from River Kaveri 700 Mtrs From Kumbeswarar Temple
1 & 2 BHK - 410, 671 & 644 Sqft

Balaji Homes
98408 40017 / 88382 74383






**2&3BHK APARTMENTS FOR SALE**
**@ CHROMPET, MC NAGAR, Nr SaiBaba Temple**
**NSN,Vivekanantha,Rosily Schools**




Site Address : No.72, MC Nagar, 2nd Cross Street, Hasthinapuram, Chromepet, Chennai - 600 044.

SRI DEVI BUILDERS & PROMOTERS
(An ISO 9001 : 2015 Certified Company)
Bhagavathy Ammal Complex: No:4, Ezhil Nagar, Velachery Main Road, Selaiyur, Chennai - 600 073.
www.sridevibuilders.com sridevibuilders1964@gmail.com
96772 66665 / 80562 98555 / 96771 14444

BANK LOAN AVAILABLE
Bank of Baroda
SBI



**PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET**

KRISHNA NAGAR
(Nr.Hasthinapuram Bus Stand)




AVAILABLE
4BHK
1730 Sq Ft
(2 Covered Car parking)
3BHK
1369 Sq Ft
24 Hrs Power Backup*

PADMANABHA NAGAR
(Near GURU RAGHAVENDRA TEMPLE)




ONLY 1 FLAT AVAILABLE

2 BHK - 985 Sqft

Specification
- AUTOMATIC LIFT
- As Per Vaasthu
- CCP
- CCTV
- Videodoor Phone
- Red Bricks Construction
- Ev Charger Point
- AUTOMATIC WATER TANK LEVELLER

Sankar Constructions
98416 59929 / 98416 59930

LAND OWNER INVITE JOINT VENTURE OR OUTRATE

## எருக்க இலை... அட்சதை... பசுஞ்சாணி; ரதசப்தமியில் தண்ணீரால் தர்ப்பணம்!



தை மாத அமாவாசைக்குப் பிறகு ஏழாம் நாள் சப்தமி. ரத சப்தமி. சூரிய பகவானுக்கு உரிய நாள் ரத சப்தமி. ஏழு வண்ணங்களைக் கொண்ட ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட ஒற்றைச் சக்கரம் கொண்ட தேரில் சூரிய பகவான் வானத்தில் வலம் வருவதாக ஐதீகம்.

சூரிய ஒளி இல்லாவிட்டால் பூவுலகில் எதுவுமே இருக்க முடியாது. எனவே தான் உயிர்களைக் காக்கும் பரம்பொருளான திருமாலும் சூரியனும் ஒன்றாகக் கருதப்படுகின்றனர் என விவரிக்கிறது புராணம். சூரிய பகவானின் ரதத்திற்கு அருணன் சாரதியாக உள்ளார் என விளக்குகிறது புராணம்..

ரதசப்தமியன்று எருக்க இலைகளை சிரசின் மேல் வைத்துக்கொண்டு, கிழக்கு நோக்கி நின்று நீராட வேண்டும். கொஞ்சம் அட்சதையும் சேர்த்து நீராட வேண்டும். பசுஞ்சாணியும் சேர்த்துக் கொள்வார்கள். பெண்கள் மஞ்சளும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ரதசப்தமி திருநாளில் சூரியனின் கிரணங்கள் எருக்க இலைகள் மூலம் ஈர்க்கப்பட்டு, உடலில் ஊடுருவிச் சென்று, வியாதிகளைப் போக்கி நமக்கு ஆரோக்கியத்தைத் தருகின்றன. அதேபோல், இந்த தினத்தில் ஆறு அல்லது குளம் முதலான நீர்நிலைகளில் நீராடுவது சிறப்பு! கடல் நீராடுவதும் மகத்துவம் வாய்ந்தது.

மாசி மாதம் விசேஷமான மாதம். தை மாத அமாவாசைக்குப் பின்னர் வரக்கூடிய சப்தமி, ரத சப்தமி என்று போற்றப்படுகிறது. ரதசப்தமி நாளில், வீட்டு வாசலை மெழுகி, தேர்க்கோலம் இட்டு அலங்கரிக்க வேண்டும். பிறகு, சூரிய பகவானுக்கு சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியம் செய்து பூஜிக்க வேண்டும். கோதுமை கலந்த உணவு அல்லது பாயசம் நைவேத்தியம் செய்யலாம். இந்தப் புண்ணிய தினத்தில், வீட்டு பூஜையறையிலும் சூரிய ரதம் போன்று கோலம் வரைந்து, உரிய ஸ்லோகங்கள் கூறி சூரியனை வழிபடுவதால், சகல நலன்களும் உண்டாகும். எதிர்ப்புகளெல்லாம் விலகும். தீய சக்திகள் அனைத்தும் அண்டாது என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்.

தன்னுடைய சுழற்சிப் பாதையில் ஆறு மாதமாகச் சூரியனிடமிருந்து தொலைவில் சுற்றிக் கொண்டிருந்த பூமி அடுத்த ஆறு மாதங்கள் சூரியனுக்கு நெருக்கமான பாதையில் சுற்ற ஆரம்பிக்கிறது. இதை தட்சிணாயனம், உத்திராயனம் என்கிறோம்.

ரத சப்தமி நாளில் சூரியனைப் போற்றுவோம். வணங்குவோம். ரதசப்தமி தர்ப்பணம் செய்து வழிபடுவோம். ரதசப்தமி நாளில் தர்ப்பணம் என்பது, வழக்கமாக எள்ளும் தண்ணீரும் விடுவது போன்றது அல்ல. வெறுமனே தண்ணீரைக் கொண்டு அர்க்யமாக விடவேண்டும்.

## வசந்த பஞ்சமி என்றால் என்ன? அதன் சிறப்புகள் என்ன?



தை அமாவாசைக்கும் மாசி அமாவாசைக்கும் இடைப்பட்ட காலத்துக்கு மாகமாதம்என்றுபெயர். அந்த மாக மாத வளர்பிறை பஞ்சமி நாளே வசந்த பஞ்சமியாகக் கொண்டாடப்படுகிறது. குளிர்காலம் முடிந்து அடுத்து வரவிருக்கும் வசந்த காலத்தை வரவேற்கும் விதமாக இந்நாள் கொண்டாடப்படுவதால், வசந்த பஞ்சமி என்று இந்நாள் அழைக்கப்படுகிறது. சரஸ்வதி தோன்றிய நாளாக இந்நாள் கருதப்படுவதால், பாரதத்தின் வடக்குப் பகுதியில் சரஸ்வதி பூஜையாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. சரஸ்வதிக்குப் பிடித்தமான நிறம் மஞ்சள்.

மஞ்சள் நிறப் பூக்கள் மலரும் காலமாக வசந்த காலம் இருப்பதால், மக்களும் மஞ்சள் நிற ஆடைகள் அணிந்து, மஞ்சள் நிறப் பலகாரங்கள் செய்து இந்நாளைக் கொண்டாடுவார்கள். கண்ணனும் பலராமனும் சாந்தீபனியிடம் குருகுல வாசம் செய்யத் தொடங்கிய நாள் வசந்த பஞ்சமி என்று பாரதத்தின் வடக்குப் பகுதிகளில் கூறப்படுவதால், அப்பகுதிகளில் இந்நாளில் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தல் விசேஷமாகக் கருதப்படுகிறது.

ராஜஸ்தான் மாநிலம் புஷ்கரத்தில் உள்ள பிரம்மா சரஸ்வதி கோயில், கர்நாடகத்தில் உள்ள உடுப்பி கிருஷ்ணர் கோயில், ஒடிசா மாநிலத்தில் உள்ள பூரி ஜகந்நாதர் கோயில் ஆகிய கோயில்களில் வசந்த பஞ்சமி ஆண்டுதோறும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அடுத்த 40 நாட்களில் வரவிருக்கும் ஹோலிப் பண்டிகையை வரவேற்கும் விழாவாகவும் இந்நாள் கருதப்படுவதால், வசந்த பஞ்சமியன்று வண்ண வண்ணப் பட்டங்களை வானில் பறக்க விட்டு மக்கள் கொண்டாடுவார்கள்.

சுக்ல பஞ்சமி என்று சொல்லப்படும் வசந்த பஞ்சமி நாளில், விரதம் இருந்து அம்பாளைத் தொழுது பிரார்த்தித்தால், வாழ்வில் வசந்தம் நிச்சயம். இந்த நாளில், காலையில் விரதம் மேற்கொள்ளுங்கள். வீட்டில் விளக்கேற்றி அபிராமி அந்தாதி பாராயணம் செய்யலாம். ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்யலாம். இவை வாழ்வில் பல உன்னதங்களைப் பெற்றுத் தரும். சர்க்கரைப் பொங்கல், பால் பாயசம், கேசரி முதலான நைவேத்தியங்களைப் படைத்து தேவியை உபாஸிக்கலாம். அதேபோல், அருகில் உள்ள கோயில்களுக்குச் சென்று அம்பாளை வணங்கி வழிபடுங்கள். செவ்வரளி மாலை சார்த்துங்கள். செந்நிற மலர்கள் சூட்டுங்கள். நெய் விளக்கு ஏற்றி வழிபடுங்கள். எலுமிச்சை மாலை சார்த்தி வழிபடுவது இன்னும் வளமும் பலமும் சேர்க்கும். முடிந்தால், அன்றைய நாளில் அம்பாளை வழிபட்டு இயலாதோருக்கு தயிர்சாதம் வழங்குங்கள். அதில் குளிர்ந்து போய், நம் வாழ்வில் வசந்தத்தைத் தந்தருள்வாள். நம் வாழ்க்கையையே குளிரச் செய்துவிடுவாள் தேவி!


# CLASSiFiEDS

## FLAT RESALE

FLAT FOR SALE
@Pallavaram
Very Nr RailwayStation
2BHK 850 SQFT
2-Floor No Lift
Semi Furnished
Ready to Occupy
9940490113

FLAT FOR RESALE
@ CHROMPET
@Raghava Nagar
2 BHK - 800 Sqft
UDS - 300 Sqft,
Purushothaman Nagar
1 BHK - 640 Sqft
UDS - 244- Sqft,
80722 30451

FLAT FOR RESALE
@ CHROMPET
JAIN NAGAR
3 BHK - 1165 Sqft
UDS - 490 Sqft, 2CCP
@RADHA NAGAR
SRI DEVI AMMAN ST
2 BHK - 720 Sqft
UDS - 560 - 1st Floor
80722 30451

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

## PLOT SALE

PLOT FOR SALE
Nr. Padappai
DTCP Approved and Patta Land
813 sqft
Nr. Thachur / Thirukazhukundram
Approved and Patta Land
2400 sqft
89406 88478

PLOT FOR SALE
@ MAMBAKKAM
Near VIT Collage,
800 mt From Vandalur
Kelambakkam Road,
DTCP Approved
North Facing 1800 Sq.Ft
9710911890

## INDEPENDENT HOUSE

INDEPENDENT HOUSE FOR SALE
@chromepet
Surya Avenue
behind Saravana stores 200 ft road
3 portion house
Build up area Around 2500SQFT
9841141583

INDEPENDENT DUPLEX VILLA
FOR SALE @ RAJAKILPAKKAM
NR.KENDRIYA VIDYALAYA
1650 sq ft land
1800 sq built up area
semi furnished ccp
Excellent location Ph 9884567001

## BUILDING CONTRACT

KR HOMES
CHROMEPET-44
Home Construction
@ 2250/- Sq.Ft.,
including
OHT & Septic Tank
• Architectural Design
• Engineer Supervision
• Branded Materials
80724 99969


## தை கிருத்திகை முருகன் வழிபாடு




தை மாத கிருத்திகை காக்கும் கடவுளாக திகழக் கூடிய முருகப்பெருமானை கார்த்திகை பெண்கள் எடுத்து வளர்த்தார்கள் என்பதால் தான் முருகப்பெருமானுக்கு கார்த்திகேயன் என்ற பெயர் வந்தது. அவர்களின் நினைவாக தான் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய கார்த்திகை நட்சத்திர நாளன்று நாம் முருகனை நினைத்து வழிபாடு மேற்கொள்கிறோம். கோவில்களில் ஷண்முக அர்ச்சனை என்ற ஒரு அர்ச்சனை இருக்கும். அதில் ஆறு அர்ச்சகர்கள் ஆறு விதமான மலர்களை வைத்து ஆறு விதமான மந்திரங்களை கூறி முருகருக்கு அர்ச்சனை செய்வார்கள். ஒவ்வொரு முகத்திற்கும் ஒவ்வொரு விதமான மலர்களையும், நெய்வேத்தியங்களையும், மந்திரத்தையும் உச்சரிப்பதாக பொருள்படும். இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதற்கு மாறாக நாமே நம் வீட்டில் இந்த சண்முக அர்ச்சனையை செய்யலாம். அதுவும் கார்த்திகை நட்சத்திரம் நாளன்று செய்யக்கூடிய இந்த சண்முக அர்ச்சனை மிகவும் விசேஷமாக கருதப்படுகிறது. கார்த்திகை நாள் அன்று முழுவதும் உபவாசம் இருக்க வேண்டும். அன்றைய தினம் முருகப்பெருமானின் படத்தை சுத்தமாக துடைத்து சந்தனம் குங்குமம் வைத்து கொள்ள வேண்டும். பிறகு மாலை 6 மணிக்கு விளக்கேற்றி வைத்து அவருக்கு ஆறு விதமான பிரசாதங்களை நெய்வேத்தியம் செய்ய வேண்டும். சர்க்கரை பொங்கல், வெண்பொங்கல், புளி சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம், தேங்காய் சாதம் என்று ஆறு வகையான உணவுகளை நெய்வேத்தியமாக படைக்கலாம். இப்படி ஆறு வகையான உணவுகளை படைக்க இயலாதவர்கள் சர்க்கரைப் பொங்கலை மட்டும் வைத்தும் வழிபாடு மேற்கொள்ளலாம். பிறகு அர்ச்சனை செய்வதற்காக ஆறு வகையான மலர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். வில்வம், மரிக்கொழுந்து, முல்லை, ரோஜா, தாமரை, செவ்வரளி. இப்படி ஆறு வகையான மலர்களை எடுத்துக்கொண்டு நமக்குத் தெரிந்த முருகனின் மந்திரத்தை கூறி முருகருக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இந்த மலர்கள் கிடைக்காமல் வேறு மலர்கள் தான் கிடைக்கிறது என்றாலும் பரவாயில்லை. வாசனை நிறைந்த மலர்களாக இருந்தால் போதும். ஒவ்வொரு மலர்களிலும் 18 என்ற எண்ணிக்கையில் தனித்தனியாக எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். “ஓம் சரவணபவ” என்னும் மந்திரத்தை மட்டுமாவது கூறி அர்ச்சனை செய்ய வேண்டும். இப்படி நாம் ஆறு மலர்களையும் அர்ச்சனை செய்து முடிக்கும் பொழுது 108 முறை அர்ச்சனை செய்து முடித்திருப்போம்.

கடைசியாக இந்த ஆறு மலர்களையும் கையில் எடுத்து வைத்துக்கொண்டு நாம் எதற்காக இந்த விரதத்தை மேற்கொள்கிறோமோ அந்த வேண்டுதலை மனதார நினைத்துக் கொண்டு முருகப் பெருமானை வழிபட்டு கையில் வைத்திருக்கும் மலர்களை முருகப்பெருமானுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.


பிறகு கற்பூர தீப தூப ஆராதனை காட்டி வழிபாட்டை முடித்த பிறகு தங்களால் இயன்றால் அருகில் இருப்பவர்களுக்கு இந்த நெய்வேத்தியத்தை பிரசாதமாக வழங்கலாம். தங்கள் குடும்பத்தினருக்கு கொடுத்து விட்டு தாங்களும் விரதத்தை நிறைவு செய்யலாம்.




குரோம்பேட்டை ராதா நகர் அனுமார் கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ ராமசுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் ஸ்ரீ கோதண்ட ராமருக்கு அன்னக்கூடை உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

காலையில் பெருமாளுக்கு சர்க்கரை பொங்கல், சாம்பார் சாதம், சுண்டல் பல வகையான பழ வகைகள் கொண்டு படையல் இட்டு அன்னக்கூடை உற்சவம் வெகு விமர்சையாக நடை பெற்றது.

விழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.




தாம்பரம் இந்திய சுயராஜ்ய கட்சி, சார்பாக 76 வது குடியரசு தின விழா குளக்கரை பகுதியில் நடந்தது. நிறுவன தலைவர் வி. ராம்குமார் தேசியக் கொடியை ஏற்தினார்., சிறப்பு விருந்தினராக மாநில பொதுச் செயலாளர் குருஜி பக்தன் மக்களுக்கான மக்கள் இயக்கம். டாக்டர் தி கார்த்திக் கண்ணன் கலந்து கொண்டார்கள். சமூக ஆர்வலர் பக்தவச்சலம் மற்றும் கே. துளசிதரன். எஸ். வெங்கடேசன், நாராயணன், பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்திய சுயராஜ்ய கட்சியின் சார்பில் கலந்து கொண்டனர் தாம்பரம் மாநகர செயலாளர் வெங்கட்ராமன் நன்றி கூறினார்.



சிட்லபாக்கம் 34 வது வார்டில் உள்ள SBI காலனி நேரு பூங்காவில் 76வது குடியரசு தினவிழா கொடியேற்றி கொண்டாடப்பட்டது. இதில் மாமன்ற உறுப்பினர் சி.ஜெகன், பா.பிரதாப் Ex.mc மற்றும் நலச்சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டபோது எடுத்தபடம்.



76 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி செம்பாக்கம் மண்டலம் 39 ஆவது வார்டில் மாமன்ற உறுப்பினர் கிரிஜா சந்திரன் கொடியேற்றிய போது எடுத்த படம் அருகில் நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.


DR.KUMAR'S HEALTHCARE

DIABETIC FOOT SCREENING CAMP

GET YOUR FOOT CHECKED @

JUST ₹599 ONLY



Package Includes
| Doctor consultation
| Dietician consultation
| Blood sugar R & HbA1C
| Comprehensive foot check up
| ABI, Biothisiometery, Podia scan

Date: 16.02.25 Time: 9.00 am to 12.00 pm
Venue: Dr. Kumar's Healthcare, Chrompet.

TO REGISTER CALL 94459 35570

DR. KUMAR'S HEALTHCARE
CHROMPET, SEMBAKKAM, PAMMAL, MADURANTHAKAM




## காமகோடி தெருவா... கார் பார்க்கிங்கா...?

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 25வது வார்டு காமகோடி தெருவில் 40 அடி சாலை இருந்தும் பத்தடி சாலையாக மாறிய காட்சி. இந்த சாலையில் சில தனியார் வாகனங்கள் ஆங்காங்கே சாலையை வழிமறித்து நிறுத்தி விட்டு செல்வதினால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாக வேண்டி இருக்கிறது. மேலும் இந்த இடம் இரவு நேரங்களில் சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி உள்ளது. இதனால் அக்கம் பக்கத்தில் வசிக்கும் பொதுமக்கள் மிகவும் அச்சத்துடன் உள்ளனர். மேலும் காவல்துறையினர் சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள வாகனங்களை ஒதுக்கி சாலையை சீர் செய்து தருவார்களா என்று அப்பகுதி பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்

## ரூ.12 லட்சம் வரை வருமான வரிவிலக்கு

மத்திய பட்ஜெட்டில் ரூபாய் 12 லட்சம் வரை வருமான வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை வருமான வரி விலக்கு ரூபாய் 4 லட்சம் ஆக இருந்தது.

இதன் மூலம் 2 கோடி பேர் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக மத்திய மாநில அரசுகளின் ஊழியர்களும் தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்களும் பயனடைவார்கள்.மாதம் ஒரு லட்சம் வரை ரூபாய் சம்பளம் வாங்குபவர்களுக்கு இந்த வரி விலக்கு பயன் தரும்.

வரிவிலக்கு தவிர ரூபாய் 75000 கழிவும் உண்டு என அறிவிக்கப்பட்டு உள்ளது.

## தொடர்ந்து எகிறும் தங்கம் விலை

சென்னையில் ஒரு பவுன் தங்கம் நேற்று முன்தினம் ரூ.960 அதிரடியாக உயர்ந்தது. இதன்படி, சென்னையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.120 அதிகரித்து ஒரு கிராம் ரூ.7,730 க்கும், பவுனுக்கு ரூ.960 அதிகரித்து ஒரு பவுன் ரூ.61,840 க்கும் விற்பனையானது. நேற்று தங்கம் விலை கிராமுக்கு அதிரடியாக ரூ. 15 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.7,745க்கும் ஒரு சவரன் ரூ.120 உயர்ந்து ரூ. 61,960க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## மருத்துவப்படிப்பிற்கு கூடுதல் இடங்கள்

மருத்துவப்படிப்பில் அடுத்த ஆண்டு 10 ஆயிரம் கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் மருத்தவப்படிப்பில் 75 ஆயிரம் கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும்.

## சருமம் மிளிர உதவும் உருளைக்கிழங்கு



பச்சை உருளைக்கிழங்கை அரைத்து எடுத்த பேஸ்ட்டை தேனுடன் கலந்து சருமத்தில் தடவினால் சருமம் மிளிரும்.

உருளைக் கிழங்கு சோலானம் டியூபரோசம் என்னும் செடியின் வேரில் இருந்து பெறும் மாவுப்பொருள் நிறைந்த, சமையலில் பயன்படுத்தபடும், ஒருவகைக் கிழங்கு வகையாகும். உருளைக்கிழங்கு தாவரம் நிழற்செடி குடும்பத்தைச் சேர்ந்தது.

அரிசி, கோதுமை, சோளம் ஆகியவற்றுக்கு அடுத்து உலக அளவில் நான்காவதாக அதிகம் பயிர் செய்யப்படும் செடியினமாகும். உருளையானது பல்லாண்டு வாழ்கின்ற பூண்டுத் தாவரமாகும். உருளையின் தரைகீழ் கிளைகளின் பருத்த நுனிப்பகுதியே கிழங்காகும்.

உருளைகிழங்கில் கலோரி 70%, புரதச்சத்து 0 கிராம், நார்ச்சத்து 2.1 கிராம், இரும்புச்சத்து 0.81 மி.கிராம், கால்சியம் 12 மி.கிராம், சோடியம் 6 மி.கிராம், பொட்டாசியம் 421 மி.கிராம், சர்க்கரை 0.8 கிராம் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும் வைட்டமின் B6, சி போன்றவையும் நிறைந்துள்ளன.

உருளைக்கிழங்கில் கார்போஹைட்ரேட் அதிகமாகவும், புரதம் குறைந்த அளவும் உள்ளன. எனவே ஒல்லியாக இருப்பவர்கள் உருளைகிழங்கை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை அதிகரிக்கும்.

உருளையில் கார்போஹைட்ரேட் அதிகம் இருப்பதால், அது சுலபமான செரிமானத்திற்கு உதவியாக இருக்கும். அதனால் நோயாளிகள், குழந்தைகள் மற்றும் செரிமானமின்மையால் கஷ்டப்படுபவர்களுக்கு உருளையானது சிறந்த உணவாகும்.

வைட்டமின் சி, வைட்டமின் பி மற்றும் பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ் , ஜிங்க் ஆகிய கனிமங்கள் சருமத்திற்கு மிகவும் நல்லது. இவை அனைத்தும் உருளைகிழங்கில் நிறைந்துள்ளன. மேலும், பச்சை உருளைக்கிழங்கை அரைத்து எடுத்த பேஸ்ட்டை தேனுடன் கலந்து சருமத்தில் தடவினால் சருமம் மிளிரும். மேலும் இது பரு மற்றும் சரும புள்ளிகளை குணப்படுத்த உதவும்.

## சிறு நீரக கல் குறைக்க

இஞ்சி – நெல்லிக்காய் ஜூஸ்இரண்டு பெரிய நெல்லிக்காய்களை நறுக்கிக் கொள்ளவும். ஒரு சிறு துண்டு இஞ்சியின்தோல் சீவித் துருவவும்.

நெல்லிக்காய்,இஞ்சியுடன்அரை கப் தண்ணீர் சேர்த்து அரைக்கவும்.பிறகு, இதில்இரண்டு டீஸ்பூன் சர்க்கரை,ஒரு டீஸ்பூன் தேன், ஒரு சிட்டிகை உப்பு,கால் டீஸ்பூன் சீரகத்தூள் சேர்த்து மேலும்ஒரு டம்ளர் தண்ணீர்சேர்த்து அரைக்கவும். இதை வடிகட்டி, தேவைப் பட்டால்குளிரவைத்துப் பரிமாறவும்.இந்த ஜூஸை தொடர்ந்து குடித்து வந்தால், சிறுநீரகக் கல்கரையும்.இந்த ஜூஸை தொடர்ந்து குடித்து வந்தால்,சிறுநீரகக் கல் கரையும்.

## காளான் குழம்பு



தேவையான பொருட்கள்: காளான் - 300 கிராம், வெங்காயம் - 2, தக்காளி - 2, மஞ்சள் தூள் -1/4 ஸ்பூன், கொத்துமல்லி விதை(தனியா) - 1 ஸ்பூன், சீரகம் - 3/4 ஸ்பூன், சோம்பு - 1/2 ஸ்பூன், பட்டை - 2 இன்ச் துண்டு, கிராம்பு - 2, ஏலக்காய் - 2, காய்ந்த மிளகாய் - 5 (அ) காரத்துக்கு ஏற்ப, தேங்காய் கால் மூடி, எண்ணெய் தேவைக்கு ஏற்ப, உப்பு தேவைக்கு ஏற்ப, கறிவேப்பிலை, கொத்தமல்லி தழை சிறிதளவு செய்முறை: முதலில் ஒரு வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கி கொள்ளவும். கடாயில் ஒரு ஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும் தனியா, சீரகம், பட்டை, கிராம்பு, சோம்பு, ஏலக்காய் போட்டு பொரிந்ததும் வெங்காயம், காய்ந்த மிளகாய் சேர்த்து வதக்கவும். அடுத்து அதில் தக்காளி சேர்த்து வதக்கவும். தக்காளி நன்றாக மசிந்ததும் தேங்காய்த் துருவல் சேர்த்து வதக்கி ஆறவைக்கவும். அனைத்தும் நன்றாக ஆறியதும் அதை மிக்சியில் போட்டு நன்றாக அரைத்து கொள்ளவும். இப்போது காளானை நன்கு கழுவி, நீரில்லாமல் துடைத்து சற்றே பெரிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும். கடாயை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் கடுகு போட்டு தாளித்த பின் வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்து வதக்கவும். அடுத்து அதில் அரைத்த மசாலா, மஞ்சள்தூள், உப்பு, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். குழம்பு நன்றாக கொதி வந்ததும், காளான் துண்டுகளை சேர்த்து அடுப்பை மிதமான தீயில் வைக்கவும். குழம்பு திக்கான பதம் வந்து எண்ணெய் பிரிய ஆரம்பித்தவுடன் கொத்துமல்லி இலை தூவி அடுப்பிலிருந்து இறக்கவும். சூப்பரான காளான் குழம்பு தயார்.

## தொண்டை கரகரப்பு

சுக்கு, பால், மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

## ஏப்பம்

அடிக்கடி ஏப்பம் வருகிறதா? வேப்பம்பூவை தூள் செய்து 4 சிட்டிகை எடுத்து இஞ்சி சாறுடன் கலந்து உட்கொண்டால் குணமாகும்.


WANTED IMMEDIATELY
SECURITY GUARDS
LIFT OPERATOR
HILTON MATRIC.HR.SEC.SCHOOL
#7,Works Road,New Colony,
Chrompet,Chennai - 44
Ph: 044-2241 1552 & 2241 8061
E-mail: hiltonschool90@gmail.com

On-Line Also. Age No Bar
SPOKEN HINDI - ENGLISH
HINDI - ENGLISH - SANSKRIT - TAMIL
HINDI PRACHAR SABHA
PARICHAYA TO PRAVEEN
Search @ Google & Just dial for
MPR Hindi Study Centre
87545 19519 98418 19519

PLAN, NEW HOUSE BUILD
☑ Flat Renovation
☑ Modular Kitchen
☑ Wood Work
☑ Sump & Compound Wall
☑ White Wash
73 97 23 23 65
88 25 78 84 08

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street,
Hasthinapuram, Chennai - 600 064.



SAINT-GOBAIN
MOSQUITO NET
PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL,
FRIDGE, OLD COMPUTER, LAPTOP,
UPS, BATTERIES, MUSIC SYSTEM,
WATER HEATER, GYM ITEMS,
WOODEN FURNITURE, SOFA SET,
COT, BEURO, DINING SET,
DRESSING & OFFICE TABLE,
OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979



குரோம்பேட்டை பத்மநாப நகர் பொதுநலச் சங்கம் சார்பாக 76 ஆவது குடியரசு தின விழா சங்கம் தெரு பூங்காவில் தேசிய கொடி ஏற்றி கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக சங்கர் கன்ஸ்ட்ரக்சன் உரிமையாளர் K.H.சங்கரநாராயணன் கலந்து கொண்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன்.முன்னாள் மாமன்ற உறுப்பினர் சீதா தியாகராஜன் மற்றும் பத்மநாப நகர் பொது நலச்சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## செல்போன் விலை குறையுமா?

மின்னணு பொருள்களில் செல்போன்கள் மற்றும் அதைச் சார்ந்த பிற பொருள்களுக்கான அடிப்படை சுங்க வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது அதே சமயம் ஃபிளாட் பேனல் டிஸ்ப்ளேக்களுக்கான அடிப்படை சுங்க வரி 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இது தொலைக்காட்சி மற்றும் செல்போன் விலையை பாதிக்கும்.






தாம்பரம் மாநகராட்சி செம்பாக்கம் மூன்றாவது மண்டல அலுவலகத்தில் 76 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு மண்டல குழு தலைவர் ஜெயபிரதீப் சந்திரன் தலைமையில் கொடி ஏற்றி மரியாதை செய்த போது எடுத்த படம். அருகில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் செம்பாக்கம் மண்டல அலுவலக அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

## 36 வகை மருந்துகளுக்கு வரி ரத்து

உயிர் காக்கும் 36 வகை மருந்துகளுக்கு சுங்க தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும் 6 வகை மருந்துகளுக்கு 5 சதவிகிதம் வரியில் சலுகை அளிக்கப்படுகிறது அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## மின்சார வாகனம் விலை குறையும்

மத்திய பட்ஜெட்டில் லித்தியம் பேட்டரி களுக்கான சுங்கவரி முற்றிலும் குறைக்கப்பட்டுள்ளது இதனால் லித்தியம் பேட்டரியை பயன்படுத்தும் வாகனங்களின் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது










Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725